கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | |
|---|---|---|
| அ.சா.1 | | நாள் 08.02.2023 |
| அமர்வு வழக்கு எண். | 16/2021 | |
| பெயர் | மாலா | த/பெ |
| வயது | | தொழில் |
| ஜாதி | | மதம் |
| கிராமம் | | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை:

நான் கொத்தந்தெருவில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். 20 ஆண்டுகளுக்கு முன்பு என் கணவர் துரை இறந்துவிட்டார். எனக்கு ரேவதி, மகாலெட்சுமி, ேஹமா ஆகிய 3 குழந்தைகள். 2015 ல் மூத்த பெண் ரேவதியை காசிநாதன் மகன் வரதராஜன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தேன். ஆஜர் எதிரிகள் தான்மேற்படி காசிநாதன் மற்றும் வரதராஜன் ஆவார்கள். மேற்படி என் மகள் ரேவதிக்கு இரட்டை குழந்தைகளாக ஒரு ஆணும் பெண்ணும் பிறந்தார்கள். அந்த குழந்தைகள் பெயர் சிவன்கண்ணா, சிவன்யா. மேற்படி சிவன்கண்ணாவை நான் வளர்த்து வந்தேன். சிவன்கண்ணாவுக்கு காய்ச்சல் ஏற்பட்டதால் என் மகளிடம் பணம் கேட்டு அதனை வரதராஜனிடம் கொடுத்து அனுப்பும்படி சொன்னேன். 18.12.2019 அன்று வரதராஜன் தங்கை மேனகாவை பார்க்க வரதராஜன் அவரது அம்மாவை அழைத்துக் கொண்டு குத்தாலத்திற்கு சென்றுவிட்டார். குத்தாலம் சென்ற மேற்படி இருவரும் அன்று மாலையே வீடு திரும்பி விட்டார்கள். அவ்வாறு வந்தவுடன் 1ம் எதிரியிடம் என் மகள் தனது குழந்தையை போய் பார்த்தீர்களா என்று கேட்டார். அதற்கு 1ம் எதிரி பார்க்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். ஏன் பார்க்கவில்லை என்று என் மகள் கேட்டதற்கு எதிரிகள் இருவரும் என் மகளை பார்த்து இவள் இவ்வாறு தான் தொல்லை செய்து கொண்டே இருக்கிறாள் நீ மண்ணெண்ணையை ஊற்று நான் கொளுத்துவிடுகிறேன் என்று 2ம் எதிரி சொல்லியிருக்கிறார். அப்போது 18.12.2019 இரவு 8 மணி இருக்கும். 1வது எதிரிக்கு 2ம் திருமணம் செய்து வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு 2ம்எதிரி மண்ணெனையை என் மகள் மீது ஊற்றியிருக்கிறார். 1வது எதிரி என் மகள் மீது தீப்பற்ற வைத்திருக்கிறார். ஊர்க்காரர்கள் பார்த்துவிட்டு என் மகளை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று இருக்கிறார்கள். அவர்களுடன் 1ம் எதிரியும் போய் இருக்கிறார். இதுகுறித்து கேள்விபட்டு மேற்படி மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். அப்போது என்

மகள் தீக்காயங்களுடன் கிடந்தார். ஆனால் நன்றாக பேசக்கூடிய நிலையில் இருந்தார். அப்போது என் மகளை நான் விசாரித்ததற்கு மேலே கூறியவாறு நடந்த விபரத்தை என் மகள் என்னிடம் சொன்னார். அதனை நான் போலிசில் புகார் வாக்குமூலமாக கொடுத்தேன். அதனை போலிசார் பதிவு செய்து கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படுவது தான் நான் கொடுத்த புகார் வாக்குமூலம் ஆகும். அது அசாஆ 1. அதன்பின்னர் ஒரு வார காலம் என் மகள் உயிருடன் மருத்துவமனையில் இருந்த பின்னர் மருத்துவமனையிலேயே இறந்துவிட்டார். அதற்கு முன்பாக என் மகளை நீதிமன்றத்தில் இருந்து வந்த நீதிபதி விசாரித்தார். போலிசார் பிரேத விசாரணை செய்த போது நானும் இருந்தேன். போலிசார் விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.